www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுத் தேர்வு - 2024

வகுப்பு : 12
காலம் : 3.00 மணி

## பொதுத்தமிழ்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் _______
(அ) மணல் அள்ளுதல் (ஆ) பருவநிலை மாற்றம்
(இ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல் (ஈ) பாறைகள் இல்லாமை

2. "பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடி பரதவர்" – இவ்வடியில் தடித்த சொல்லுக்கான இலக்கணக்குறிப்பைத் தேர்வு செய்க.
(அ) வினைத்தொகை (ஆ) பண்புத்தொகை
(இ) உம்மைத்தொகை (ஈ) உவமைத்தொகை

3. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகிற இலக்கண நூல் _______
(அ) தண்டியலங்காரம் (ஆ) நன்னூல்
(இ) தொல்காப்பியம் (ஈ) யாப்பருங்கலக்காரிகை

4. 'இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக' என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது.
(அ) அவமானம் (ஆ) வக்கிரம் (இ) வஞ்சனை (ஈ) இவை மூன்றும்

5. "அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்" – இக்கூற்று யார், யாரிடம் கூறியது?
(அ) இராமன், சுக்ரீவனிடம் (ஆ) இராமன், குகனிடம்
(இ) இராமன், வீடணனிடம் (ஈ) இராமன், சவரியிடம்

6. கூற்று: இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்
காரணம்: கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.
(அ) கூற்று தவறு, காரணம் தவறு (ஆ) கூற்று சரி, காரணம் தவறு
(இ) கூற்று சரி, காரணம் சரி (ஈ) கூற்று தவறு, காரணம் சரி

7. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" – இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
(அ) வேளாண்கருவி (ஆ) தச்சுக்கருவி
(இ) போர்க்கருவி (ஈ) இசைக்கருவி

8. 'கை ஏந்தி வாங்கிய துளிகள்' பற்றி அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது.
(அ) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது
(ஆ) இதயத்தினுள் வழிந்து கொண்டிருகிறது
(இ) மழைக் கனவிலிருந்து விடுபடுகிறது இவ்வூர்
(ஈ) உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்

9. "பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது. பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெழுது" என்றவர் _______
(அ) சுரதா (ஆ) பாரதியார் (இ) பாரதிதாசன் (ஈ) கவிமணி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. சுரதா நடத்திய கவிதை இதழ் ________
(அ) விண்மீன் (ஆ) இலக்கியம் (இ) ஊர்வலம் (ஈ) காவியம்

11. "எங்கள் தந்தையர் நாடென்ற பேசினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது ______
(அ) தாய்வழிச் சமூகமுறை (ஆ) தந்தைவழிச் சமூகமுறை
(இ) விரிந்த குடும்ப முறை (ஈ) தனிக்குடும்ப முறை

12. பொருத்துக.
(அ) தமிழ் அழகியல் – (1) பரலி சு நெல்லையப்பர்
(ஆ) நிலவுப்பூ – (2) தி.சு.நடராசன்
(இ) கிடை – (3) சிற்பி பாலசுப்பிரமணியம்
(ஈ) உய்யும் வழி – (4) கி. ராஜநாராயணன்
(அ) அ–2, ஆ–3, இ–1, ஈ–4 (ஆ) அ–2, ஆ–3, இ–4, ஈ–1
(இ) அ–2, ஆ–1, இ–4, ஈ–3 (ஈ) அ–2, ஆ–4, இ–3, ஈ–1

13. படிமம் என்பதன் பொருள் _______
(அ) ஒலி (ஆ) சொல் (இ) காட்சி (ஈ) செயல்

14. சரியான விடையைத் தேர்வு செய்க.
(அ) அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் முப்பத்தெட்டு, இயல்கள் மூன்று.
(ஆ) திருக்குறள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று.
(இ) "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே" என்று புகழ்ந்தவர் பாரதியார்.
(ஈ) திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.
(அ) அ, ஆ, இ – சரியானவை (ஆ) ஆ, இ, ஈ – சரியானவை
(இ) அ, இ – சரியானவை (ஈ) ஆ, ஈ – சரியானவை

## பகுதி – II

### பிரிவு –1

ஏவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
16. வசனம், கவிதை வேறுபடுத்துக.
17. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
18. கலிவிழா, ஒலிவிழா – விளக்கம் தருக.

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

19. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
20. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
21. சென்னையில் உள்ள நூலகங்களைக் குறிப்பிடுக.

### பிரிவு – 3

எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக. 7×2=14

22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) சாய்ப்பான் (ஆ) அமர்ந்தான்

23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) தனியாழி (ஆ) புதுப்பெயல்

24. கீழ்க்காணும் சொல்லுருபைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்கள் அமைக்க.
கொண்டு <

25. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
உள்ளங்கை நெல்லிக்கனிபோல



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

ஐப்பசி அடமழையில் ஊருணி நிறைந்தது.

27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனைக் கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

(அ) பலகை (ஆ) தாமரை

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதுதான.

30. கலைச்சொல்லாக்கம் தருக.

(அ) Family tree (ஆ) Visa

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.

மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

தலை, தளை, தழை

## பகுதி – III

### பிரிவு –1

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

31. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

32. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

34. இராமலிங்க அடிகளார் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

35. 'சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்' – விளக்குக.

36. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்குக.

37. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்குக.

38. இந்தோ – சாரசனிக் கட்டடக்கலை குறித்து விளக்குக.

### பிரிவு – 3

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×4=12

39. (அ) ஏகதேச உருவக அணியைச் சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

(ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. (அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

(ஆ) அகநானூற்றுப் பாடல் வெளிப்படுத்தும் உள்ளுறைப் பொருளை விளக்குக.

41. வெண்பாவிற்கான இலக்கணத்தைக் குறிப்பிடுக.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

(அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

**(அல்லது)**

(ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

43. இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

வெட்டியடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

– பாரதியார்

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. (அ) 'செய்ந்நன்றியறிதலே அறம்' என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

**(அல்லது)**

(ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

45. (அ) கவிதை நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**(அல்லது)**

(ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46. (அ) உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்....... கதையைத் தொடர்ந்து முடிக்க.

**(அல்லது)**

(ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" – இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி – V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

(அ) "ஓங்கலிடை..." எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள்பாடலை எழுதுக.

(ஆ) "எந்நன்றி..." எனத் தொடங்கும் குறளை எழுதுக.

*************

M.Poovarasan M.Sc B.Ed
PG Asst in Chemistry
Dharmapuri district



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com